RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21s221

OPEN ACCESS

# சித்தர் - வள்ளலார் பாடல்களில் இறைநெறிக் கோட்பாடுகள்

## மோ. ரூபா [அ, *]

[அ] தமிழ்த்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, சென்னை-600032. தமிழ்நாடு, இந்தியா.

# The Theological Priciples of Siddhar and Vallalar Songs

## M. Roopa [a, *]

[a] Department of Tamil, Chellammal Women's College, Chennai-600032, Tamil Nadu, India.

* Corresponding Author: m.roopa1982@gmail.com

Received: 04-01-2021
Revised: 15-04-2021
Accepted: 17-04-2021
Published: 30-04-2021

Check for updates

### ABSTRACT

The Theological Priciples of Siddhar's and Vallalar's songs reflects the same in Reform Policies. This dissertation focuses on reform policies found in the theological principles of God in Siddhar's and Vallalar's songs. The objective of this dissertation is based on the theological aspects like caste denial and Unification of God and Reform policy like Elimination of Superstitious beliefs found in Siddhars and Vallalar. Siddhar's found God as Love where as Vallalar empathized with the Withered Crops and he became one such. He initiated the movement of 'Eternal Fire' (Anaya Adupu) to extinguish the fire of starvation. The fire he lit continues to glow even today and serves the purpose. The cornerstone of Love is care principle in it. Thus it can be concluded that the theological principles of God in Siddhars and Vallalar are found and proved to be the same in this dissertation.

**Keywords:** Sarvam, Uvathal, Saatrum, Pattar, Thayavu, Anagan

## முன்னுரை

சமூகத்தில் பித்தர்களைப் போல் அலைந்து திரிந்து சித்து வேலைகள் செய்து சீர்திருத்தக் கருத்துக்களை ஆணித்தரமாய் பதிவு செய்தவர்கள் சித்தர்கள். அவர்கள் யாருக்கும் அஞ்சாதவர்கள், எவற்றின் மீதும் பற்று அற்றவர்கள். “சித் என்றால் அறிவு. அறிவு வடிவமாகத் தன்னை ஆக்கிக் கொண்டவர்கள் சித்தர்கள்.”(Aranga Ramalingam, 2019) என்று அரங்க. இராமலிங்கம் அவர்கள் சித்தர் என்ற சொல்லுக்கு விளக்கம் அளிக்கிறார். சுpத்தர்கள் மக்களோடு மக்களாக ஒன்றிணைந்து வாழ்ந்தவர்கள். அதனால் மக்களுடைய சாதி வெறி மதவெறி அனைத்தும் கண்டு வெகுண்டு அதனைச் சாடியவர்கள். “சித்தர்களைப் பித்தலாட்டக்காரர்கள் என்று கூறுவதுண்டு. பித்தலை - பித்தளை, ஆடகம் பொன். புpத்தளையைப் பொன்னாக மாற்றும் ரசவாதம் அறிந்திருந்ததால் சித்தரை பித்தலாட்டக்காரர் என்ற மறைமொழி (பரிபாஷை) நயத்தோடு கூறுவர். ரசவாதம் கூடுவிட்டு கூடு பாய்தல் இரண்டு நிலைகளில் நிகழும்.”(Aranga Ramalingam, 2019) இவ்வாறு கூடு விட்டு கூறு பாய்தல், இரும்பைப் பொன்னாக மாற்றுதல் போன்ற சித்து வேலைகளை சித்தர்கள் அறிந்திருந்தனர். இத்தகைய சித்து வேலைகள் யாவும் அறிந்தவராய், மக்களிடையே சமயவெறியும், மதவெறியும் தலைத்தூன்றிய காலத்திலே சமூகத்தின் விடிவெள்ளியாய், மூடநம்பிக்கை என்னும் இருள் அகற்றிய ஞானஒளியாய் மக்களின் பசிப்பிணி போக்க வந்த அட்சயப் பாத்திரமாய் திகழ்ந்தவர் இராமலிங்கம் என்னும் இயற்பெயர் கொண்ட திருவருட்பிரகாச வள்ளலார். “வள்ளலார் இறையருள் பெற்ற ஞானி மட்டுமல்ல. மனித சமுதாயத்தின் புரட்சிகரமான மாறுதல்களை விரும்பிய சீர்திருத்தவாதியுமாவார்.” (Sivagnanam. Ma. Po, 2001) என்று

ம.பொ. சிவஞானம் குறிப்பிட்டுள்ளார் வள்ளலார் எவ்வுயிரையும் தம்முயிர் போல் எண்ணி அன்பு செய்த அருளாளர். ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடின்றியும், சாதி மத வேறுபாடின்றியும் சமரச சமுதாயம் உருவாக அரும்பாடுபட்டவர். 'தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் செகத்தை அழித்திடுவோம்' என்று பாரதி பாடியுள்ளார். ஆனால் கருணை வடிவான இராமலிங்கரோ பசி என்னும் நோயை போக்குவதற்கு வடலூரில் அன்னதான முறையைக் கொண்டுவந்தவர். அவர் ஏற்றி வைத்த அடுப்பு 'அணையா அடுப்பாக' எரிந்து பல்லாயிரக்கணக்கான மக்களின் பசியைப் போக்குகிறது. சித்தர்கள் வாழ்ந்த காலமும், வள்ளலார் வாழ்ந்த காலமும் வெவ்வேறாக இருந்தாலும் கொள்கையின் அடிப்படையில் ஒன்றிணைந்து இருப்பதால் சித்தர்கள் பாடலையும் வள்ளலார் பாடலையும் ஒப்பிட்டு ஆய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## சாதி மத சீர்திருத்தம்

ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையாய் இருப்பது சமூக ஒருமைப்பாடே ஆகும். சமூகத்தின் பேரழிவுக்கும், பொருளாதாரப் பின்னடைவுக்கும் அடிப்படைக் காரணமாக இருப்பவை சாதிமத வேறுபாடேயாகும். வள்ளலார் வாழ்ந்த காலத்தில் சமுதாயம் முழுவதும் சாதிவெறி ஆதிக்கம் பெற்றிருந்தது. அக்காலத்தில் பிராமணர்கள் மற்றவர்களை தங்களிடமிருந்து ஒதுக்கியதோடு மற்றவர்களுக்கும் தங்களுக்கும் இடையே மிகப்பெரிய இடைவெளியை ஏற்படுத்திக் கொண்டு வாழ்ந்தனர். அதனை அறவே வெறுத்தவர் வள்ளலார் அவர்கள். எல்லா உடலும் ஒன்றே. இதிலே சாதி என்ற பாகுபாட்டுக்கு இடமில்லை என்று சிவானந்த போதம் உரைக்கிறது. இதனை,

"சாதியாவ தெவறறிவார்

சருவவுடலு மொன்றாச்சே" (சிவானந்த போதப் பாடல் - 496)

என்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம். அது போலவே,

"எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்

தம்முயிர் போல் எண்ணி உள்ளே

ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்

யாவர் அவர் உளந்தான் சுத்த" (Sivagnanam. Ma. Po., 2001)

என்ற பாடல் வள்ளலாரின் ஒருமைப்பாட்டுணர்வை விளக்குகிறது. வள்ளலார் வாழ்ந்த காலத்தில் 'உயர்சாதியினரின் நிர்வாகத்தரிலுள்ள பள்ளகளில் தாழ்சாதிப் பிள்ளைகள் சேர்க்கப்படுவதில்லை. ஆதனால் அறிவு விளக்கந்தரும் கல்வி, முன்னேறிவிட்ட சாதியார்களுக்கே உரிமையாக இருந்தது. அந்தக் கொடுமையை ஒழிப்பதற்கே பள்ளிகளின் நிர்வாகத்தை ஆங்கில அரசினரே மேற்கொள்வது நலம் என்றார் வள்ளலார். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் தோன்றி வாழ்ந்த சமூக சீர்திருத்தவாதி ஒவ்வொருவருடைய கருத்தும் இதுவாகவே இருந்திருக்கின்றது. (Sivagnanam. Ma. Po., 2001) இதிலிருந்து வள்ளலாரின் சீர்திருத்த உணர்வு புலப்படுகிறது. வள்ளலார் எழுதிய ஆறாம் திருமுறை திருக்கதவம் திறத்தல் என்ற பகுதியில் சாதி ஒழிப்பு குறித்து பாடியுள்ளார்.

"கூறுகின்ற சமயம் எலாம் மதங்கள் எலாம் பிடித்துக்

கூவுகின்றார் பண்ஒன்றும் கொண்டறியார் வீணே

நீறுகின்றார் மண்ணாகி நாறுகின்றார்" (திருவருட்பா, ஆறாம் திருமுறை, திருக்கதவம் திறத்தல் - பா. 7.)

என்று வள்ளலார் மக்கள் சாதி மத வேறுபாடு பார்த்து வீணே அலைகின்றார் என்றும், மண்ணோடு மண்ணாக நாறுகின்றார் என்றும் சாடுகின்றார்.

"பறைச்சியாவ தேதடா பணத்தியாவதேதடா" (Kowsalya vijayan, 1998)

என்றும்,

“சதுர்வேதம் ஆறுவகைச் சாத்திரம் பல

தந்திரம் புராணங்கலை சாற்று மாகமம்

விதம்வித மானவான வேறு நூல்களும்

வீணான நூல்களேயென் றாடாய் பாம்பே” (பாம்பாட்டி சித்தர்- 98)

என்றும் பாம்பாட்டிச் சித்தர் சாதியினைச் சாடுகின்றார். இவரைப் போலவே சிவவாக்கியரும் சாதிபேதம் கூடாது என்று சாடுகின்றார்.

“இட்ட குண்டன் ஏதடா இருக்கு வேதம் ஏதடா” (சிவவாக்கியர் - 312)

என்றும்,

“வேதம் ஓதும் வேலையே வீணதாகும் பாரிலே” (மேலது 501)

என்றும்,

“சாத்திரங்கள் ஓதுகின்ற சட்டநாத பட்டரே

வேர்த்து இறைப்பு வந்த போது வேதம் வந்து உதவுமா” (மேலது 13)

என்றும் சிவவாக்கியர் சாதி வேறுபாட்டை வெறுத்து பாடுகின்றார். ஔவை பெருமாட்டியும் தன்னுடைய நல்வழி என்ற நூலில் சாதி என்பது இரண்டே ஒன்று கொடுக்கும் குணமுடைய உயர் சாதி, மற்றொன்று கொடுக்காத மனமுடைய இழிசாதி என்றும் அதை தவிர்த்து வேறெதுவுமில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். இதனை,

“சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்

……………………………………………..

இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தார்

பட்டாங்கில் உள்ளபடி.” (ஔவையார், நல்வழி - 2)

என்ற பாடல் வழி அறியலாம். ஏழை பணக்காரன் என்ற வர்க்க பேதத்தை அறவே வெறுத்தவர் இராமலிங்கர். மனிதனை மனிதன் சுரண்டுவதும், ஒரு நாட்டினரை இன்னொரு நாட்டினர் அடிமைப்படுத்துவதும், ஒரு சாதியினரை அடிமைப்படுத்திப் பிறிதொரு சாதியினர் ஆதிக்கம் செலுத்துவதும், ஒரு மதத்தினரை மற்றொரு மதத்தினர் பகைப்பதும் உயிர்களனைத்தும் பரம்பொருளின் வடிவங்கள் என்ற உண்மையை உணராமலிருப்பதன் விளைவுகளே என்று அடிகள் நம்பினார். ஆதனால் ஜீவகாருண்ய ஒழுக்கத்தை அடிப்படையாக வைத்து ஆன்மநேய ஒருமைப்பாட்டினை வளர்க்க முயன்றார் (Siva Gnanam.Ma. Po., 2001).

## கடவுட் கொள்கை

மக்களிடையே பல்வேறு சாதி மத பேதங்கள் இருந்தாலும். அவற்றின் கொள்கைகள் மாறுபட்டிருந்தாலும் அடிப்படையில் அவற்றின் கோட்பாடு ஒன்றே. அன்பே கடவுள் என்ற சிந்தனைக் கொண்டதாகவே இருந்தது. சித்தர்கள் அனைவரும் அன்பே கடவுள் என்ற கொள்கையின் அடிப்படையில் பாடல்களை பாடியுள்ளனர். வள்ளலாரும் ஜீவகாருண்யமே பேரின்ப வீட்டின் திறவுகோல் என்று குறிப்பிட்டுள்ளார். பிற உயிர்கள் மீது அன்பு கொண்டு அவ்வுயிர்களின் பசிப்பிணியைப் போக்கி வாழ வேண்டும் என்கிறார் வள்ளலார். “பசியென்கிற நெருப்பானது ஏழைகள் தேகத்தினுள் பற்றி எரிகின்றபோது ஆகாரத்தால் அவிக்கின்றது தான் ஜீவகாருணியம் என வள்ளலார் குறிப்பிட்டுள்ளார் (Ramalinga Vallalar, 1997). உலக உயிர்களின் மீது காட்டுகின்ற அன்பே கடவுளாக விளங்குகிறது என்று இராமலிங்க வள்ளலார் குறிப்பிடுகின்றார் இதனை,

"தயவுதான் மக்களுக்கு உண்மை வாழ்வைத் தருவது

தயவே அருட்பெருஞ் சோதியாய் இருப்பது

தயவுதாள் அருட்பிரகாசரின் அனக (இறை) அனுபவம்" (Annamalai. Mu., 2014)

என்ற பாடலின் வழி அறியலாம். உயிர்களிலே கடவுளைக் கண்டவர் வள்ளலார். உயிர்களிடையே கடவுளைக் காட்ட வந்தவரும் வள்ளலார் ஆவார். எனவே தான் "எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணுதல்" எனும் கொள்கையை ஒழுகும் உத்தமர்களின் அடிக்கு ஏவல் செய்ய என் சிந்தை விழைந்தது, என்று தன்னை ஒரு ஏவலனாகக் காட்டி நின்றார்.' (Annamalai. Mu., 2014) எனவே வாழும் உயிர்களிடத்தில் கடவுளைக் கண்டவர் இராமலிங்க வள்ளலார். 'தெய்வம் பலபல சொல்லும் மூடத்தனத்தை அடிகளார் வெறுத்தார். சிவம் என்னும் ஒன்றையே தெய்வமெனக் கொண்டார். அவரது சிவம், நாம ரூப பேதங்களால் சுட்டப்படும் ஆண்தெய்வமோ பெண் தெய்வமோ அன்று. எல்லாவற்றிலும் நிறைந்த சர்வ வல்லமை படைத்தது என்று பொருள்.'(Sivagnanam, Ma.Po., 2001) என்று ஒன்றே தெய்வம் என்ற கொள்கை உடையவராய் வாழ்ந்தவர் வள்ளலார். இக்கருத்தையே சித்தர் பாடல்களும் பறைசாற்றுகின்றன. திருமூலர் அவர்கள்,

"அன்பு சிவம் இரண்டு என்பர் அறிவிலார்

அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்

அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்

அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே" (திருமந்திரம் 270)

என்று அன்பே கடவுள் என்பதை விளக்கியுள்ளார். சோதி வடிவிலே இறைவனை வழிபட்டவர் இராமலிங்க வள்ளலார். அத்தகைய வழிபாட்டை சித்தர்களும் வலியுறுத்தியுள்ளனர்.

"அறிவான பூரணமே ஆதிசோதி

அகண்டபரா பரமான அருள்ஞானத்தீ (அகத்தியர் பரிபூரணம் 1200, பாடல் 566)

என்ற பாடல் சோதி வடிவில் இறைவனைக் கண்டதை அறிய முடிகிறது. உடம்பிலே இறைவன் இருக்கின்றான் என்ற கொள்கை உடையவர்கள் சித்தர்கள். அதனால் தான் உடம்பை பேணி வளர்க்க வேண்டும் என்று வலியுறுத்துவர்.

உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்

உடம்பினுக்கு உள்ளே உறுபொருள் கண்டேன்

உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று

உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே (திருமந்திரம் 725)

என்ற பாடலும்,

நட்டகல்லைத் தெய்வம்என்று நாலுநுட்பம் சாத்தியே

சுற்றிவந்து முணமுணென்று சொல்லு மந்திரம் ஏதடா?

நட்டகல்லும் பேசுமோ நாதன் உள் இருக்கையிலே (சிவவாக்கியர் 481)

என்ற பாடலும் சித்தர்களின் இறைநெறி கோட்பாட்டை விளக்குகிறது. இறைவனை அறிவு வடிவமாகவும், சோதி வடிவமாகவும், ஞான வடிவமாகவும் கண்டவர்கள் சித்தர்கள். அறிவாக, பிரணவமாக, ஞானமாக, தெய்வமாக, சிவமாகத் தன் உள்ளத்து உள்ளே ஒளிர்வது தன் உயிரே என்பதை உணர்ந்து தெளிந்தவர் உய்யவல்லார். அவரே சித்தர். (Aranga Ramalingam, 2019) என்று இராமலிங்கம் சித்தர்களின் இறைக்கொள்கையை விளக்கியுள்ளார்.

## முடிவுரை

சித்தர்கள் தங்கள் பாடல்களின் மூலம் சாதி மத வேறுபாடுகளை களைந்தெறிய வேண்டும் என்ற சீர்திருத்தக் கொள்கை உடையவர்களாக வாழ்ந்தனர். அன்பின் வடிவிலே கடவுளைக் கண்டவர்கள். சோதியே இறைவன் குடியிருக்கும் இடமாகக் கருதினர். மூடநம்பிக்கைகளை சாடியுள்ளனர். சமூகத்தில் தமக்கென ஒரு தனிப் பாதையை வகுத்துக் கொண்டு வாழ்ந்தனர். அது போலவே வள்ளலாரும் பக்தி நெறி சமூகத்தில் தனக்கென ஒரு இடம் பிடித்தவர். வள்ளலார் முதியோர் கல்வி ஆரம்பித்தவர், திருக்குறள் வகுப்பு நடத்தியவர், சமரச சன்மார்க்கச் சங்கத்தை ஏற்படுத்தியவர். அனைத்துலக ஒருமைப்பாட்டை ஏற்படுத்தியவர். சாதி மத பேதமின்றி அனைவரும் ஒரே பள்ளியில் படிக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டவர். தனிமந்திரத்தை உருவாக்கி சோதி வடிவில் இறைவழிபாட்டை வகுத்தவர். ஆகையால் சித்தர் பாடல்களும், வள்ளலார் பாடல்களும் கொள்கை அளவில் ஒன்றுபட்டிருப்பதை இக்கட்டுரையின் வழி அறிய முடிகிறது.

## References


Annamalaiyar, M., (2014), Manidha Urivil Punitha Deivam, Thayar Dhanalakshmi Padhippagam, Vellore - 632 001, India.

Aranga Ramalingam (2019), Siddhar Iraineri, Kangarani Padhippagam, Chennai – 600 074, India.

Kowsalya Vijayan, G., (1998), Ondre Kulam Oruvane Devan, Vijayan Padhippagam, Vellore –632 001. India.

Ramalinga Vallalar (1997), Thiruvarutpa, Varthamanan Padhippagam, Chennai – 600 017, India.

Sivagnanam. Ma. Po., (2001), Vallalar kanda orumaipadu, Poongodi Padhippagam, Chennai – 600 004, India.



**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License